# ஜாமக்காரன்

# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1கொரி. 2:15

**VOLUME - 9** **Reg No.TNBIL/2016/70171** **ISSUE - 1**

**JANUARY 2025 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**

Mob.: No. **9894261333**

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பான ஜாமக்காரன் வாசகர்களுக்கு,

உங்கள் யாவருக்கும் எங்கள் புதுவருட (2025) வாழத்துதல்.

வருடத்தின் துவக்க முதல் வருடத்தின் முடிவு வரை எப்போதும் நான் உங்களோடு இருப்பேன் என்று உம் பிள்ளைகளுக்கு வாக்கருளிய தெய்வமே அதே ஆசீர்வாதத்தை வரும் காலமெல்லாம் எம் வாசகர்களுக்கும், அடியேனுக்கும் அருளி வழி நடத்துவீராக.

கடந்த காலமெல்லாம் கண்மணிபோல காத்தவரே உமக்கு ஸ்தோத்திரம்.

வருட துவக்கத்தில் இந்த ஆசீர்வாதத்தோடு புதிய வருடத்துக்குள் பிரவேசிப்போம்.

அடுத்த பக்கத்தில் ஒரு முக்கிய செய்தியையும் வாசியுங்கள்.

நானும் உங்கள் அனைவருக்காகவும் ஜெபிக்கிறேன். உங்கள் அனைவருடைய காணிக்கைகளும் எனக்கு தவறாமல் கிடைத்தது. நன்றி.

**Dr. Pushparaj**

(இந்த ஜாமக்காரனை 2025 ஏப்ரல் மாத முடிவில் எழுதுகிறேன்.)

# JANUARY- 2025

# ஜாமக்காரன் வாசகர்களுக்கு மட்டும்

கடந்த வருடம் 2024 நவம்பர் மாதம் வழக்கம்போல் ஜாமக்காரன் மலையாள மொழி பெயர்புக்காக கேரள மாநில தலைநகருக்கு திருவனந்தபுரம் ரயிலில் வந்து சேர்ந்தேன். வழக்கமாக நான் தங்கும் ஹோட்டலுக்கு ரயில்வே ஸ்டேஷனிலிருந்து நடந்து சென்றேன். ஸ்டேஷனிலிருந்து சுமார் 200 மீட்டர் தூரமே உள்ள லாட்ஜிக்கு நடந்து போகும் தூரத்தைகூட அன்று என்னால் நடக்க முடியாமல் தடுமாறினேன். சில இடங்களில் நின்று நின்று ! ஒரு வழியாக லாட்ஜிக்கு போய் சேர்ந்தேன். அறைக்கு சென்று முழங்கால் படியிட்டு ஜெபித்தேன். அதன்பின் படுத்துக்கொண்டே எனக்கு என்ன நேர்ந்தது ? ஏன் இப்படி கால்கள் இரண்டும் மருத்துப்போனது. **ஸ்பான்ச் மீது** கால்களை வைத்ததுபோல நிற்க முடியாமல் தடுமாறினேன். கீழே விழுந்துவிடுவேன் போல் இருந்தது, என்ன நடந்தது என்று நானே கேட்டுக்கொண்டேன்.

இந்த நிலையில் உடனே சேலம் (என் வீட்டுக்கு) திரும்பிசெல்ல விரும்பினாலும் என்னால் ரயில்வே ஸ்டேஷனுக்குகூட நடந்துபோக முடியாது என்று உணர்ந்தேன். ஆகவே என்திட்டத்தை மாற்றிக்கொண்டு ஒரு ஆட்டோவை லாட்ஜ் வாசல் வரை கொண்டுவரச்சொல்லி திருவனந்தபுரத்தில் பிரபல ஆயுர்வேத ஆஸ்பத்திரியான **திரிவேணி நர்சிங் ஹோம்** என்ற ஆஸ்பத்திரிக்கு சென்று ஆயுர்வேத வைத்தியம் செய்து பார்ப்போம் என்று அங்கு சென்றேன். அங்கு **தலைமை மருத்துவர்** என்னை பரிசோதித்தார். இந்த பிரச்சனை சரியாகிவிடும் **ஒரு மண்டலம்** இங்கு படுத்து சிகிச்சை பெற வேண்டும் என்றார். என்னால் **ஒரு வாரம்** மட்டும் தங்க முடியும் என்றேன். அப்படியானால் **காலை மாலை** இரண்டு வேளையும் **இரண்டு விதமான** வைத்தியம் செய்ய வேண்டும். 1) ஆயுர்வேத மருத்துவம் 2) ஆங்கில வைத்திய Physiotherapy முடம்நீக்கி பயிற்சி ஆகிய இரண்டு விதமான வைத்தியமும் ஒரு வாரம் தங்கி செய்தேன். நான்காவது நாளே என்னால் ஓரளவு நடக்க முடிந்தது.

கடைசி நாள் பில் வந்தது. **ஒரு லட்சத்துக்குமேல்** கொடுக்க வேண்டும். என்னிடம் இருந்ததை கொடுத்தேன். மீதி கொடுக்கவேண்டிய தொகை சுமார் 55 ஆயிரம் ரூபாய் யாரிடம் கேட்பது கேரள முழுவதும் மார்தோமா, CSI சபை ஜாமக்காரன் விசுவாசிகள் ஏராளம் உண்டு. நான் ஆஸ்பத்திரியில் படுத்திருப்பதை மக்கள் அறிந்தால், ஆஸ்பத்திரி நிறைத்து மக்கள் கூட்டம் திரளாககூடி வர துவங்கும். என் மனைவியிடம் விவரம் கூறினேன். தன் பென்ஷன் பணத்தை உடனே GPay மூலம் அனுப்பி வைத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஒரு வாரம் கழித்து சேலம் வந்து சேர்ந்தேன்.

## CMC Hospital (Vellore)

திருவனந்தபுரம் வின்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் பணிபுரிந்த இயேசுவை குலதெய்வமாக ஏற்றுக்கொண்ட இந்து மதத்திலிருந்து வந்த சகோதரன் **தங்க குணம்** அவர்களின் மகன் Dr. **பால முகேஷ்,** M.D., நுரையிரல் சம்பந்தமான டிபார்ட்மென்டின்

HODயாக உயர்பதவியில் **CMC வெல்லூர்** கிறிஸ்தவ மெடிக்கல் காலேஜில் பணியாற்றுகிறார். அவருடன் தொடர்பு கொண்டேன். அவர் கூறினார், Uncle நீங்கள் புறப்பட்டு உடனே வெல்லூர் வந்து விடுங்கள். ஒரு மாஸ்டர் செக்கப் செய்து வியாதியின் தீவிரத்தின் முழு விவரங்களை அறிந்து கொள்ளலாம் என்றார். இவர் குடும்பத்தில் உள்ள யாவரும் எங்கள் குடும்பத்தோடு மிகவும் நெருக்கமாக, எங்களையும் எங்கள் ஊழியத்தையும் நேசிப்பவர்கள். Dr. **பால முகேஷ்** அவர்கள் அழைத்த உடன் நானும் **என் மகனும்** காரில் புறப்பட்டு சென்றோம் . CMCயில் வயது முதிர்ந்தவர்களுக்கென்றே தொடங்கப்பட்ட Department of Geriatricsல் வார்டில் **சிறப்பு அறையில்** என்னை சேர்த்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வியாதிக்கான **சிறப்பு டாக்டர்கள்** என்னை பரிசோதித்தார்கள், பலவித பரிசோதனைக்கு என் அறையிலிருந்து பல்வேறு **விசேஷ கருவிகள்** உள்ள அறைக்கு கொண்டுபோய் **பரிசோதனை ரிப்போர்டுடன்** என் அறைக்கு கொண்டுவந்து சேர்த்தார்கள். ஒவ்வொரு பரிசோதனை அறையிலும் ஆங்காங்கு உள்ள கர்த்தரால் ஏற்பாடு செய்யப்பட்ட **சிறப்பு டாக்டர்கள்** என்னை Qவில் நிற்க விடாமல் என்னை **நேராக உள்ளே** அழைத்து பிரிசோதனை செய்து அனுப்பி வைத்தார்கள். அதனால்தான் அனைத்து பரிசோதனைகளும் **ஒரு வாரத்தில்** முடித்து உதவினார்கள். மருத்துவ குறிப்புகளுடன் **என் அறைக்கு திருப்ப கொண்டு வந்து மருந்துகள் கொடுத்தார்கள். அதன்பின் முடம் நீக்கி** பயிற்சி முறையும் கற்றுகொடுத்து சந்தோஷமாக என்னை வழி அனுப்பினார்கள். CMCயில் ஏறக்குறைய அனைத்து **டாக்டர்களும்** என்னை அறிந்தவர்கள். ஆகவே பலர் அவர் வேலை நேரம் முடிந்தவுடன் **என் அறைக்கு** வந்து ஜெபித்து என்னை விசாரித்து சென்றார்கள்.



வைத்திய செலவு பெரிய அளவாக இருப்பதை பில்லில் கண்டேன். அவ்வளவு பெரிய தொகை இல்லாமல் ஆஸ்பத்திரி செலவும் 1 லட்சத்துக்கு மேல் ஆயிற்று. அந்த தொகையை செலுத்த போதிய பணம் எனக்கு கிடையாது. என்னை பரிசோதித்த ஒவ்வொரு டாக்டரும் தங்களுக்கு Consulting Fees வேண்டாம் என்று கூறி தங்கள் பங்களிப்பை நிறைவேற்றி னார்கள். கர்த்தர் தாமே அவர்களை ஆசீர்வதிப்பாராக.

CMC வெல்லூரில் கூட இருந்து சகல உதவிகளையும் செய்த தம்பி ஜேகப் அவர்களுக்கு நன்றியை கூறிக்கொள்கிறேன்.

என் மகன் Dr. SAM அவர்களை விசேஷமாக வாழ்த்துகிறேன். சேலத்திலிருந்து வெல்லூருக்கு தன் காரில் கூட்டி வந்து CMC ஆஸ்பத்திரியில் என் அறையிலேயே என்னோடுகூட படுத்து நான் சிறு நீர்

கழிப்பதற்குகூட என்னை தனியே விடாமல் கூடவே நின்று சிறு பிள்ளைகளுக்கு உதவிசெய்வதுபோல் கூடவே என்னை பிடித்துக்கொண்டு என் உடலை கழுவிவிட்டு நான் Veritgo பலவீனத்தால் **சரிந்து விழுந்துவிடாமல்** பாதுகாப்பாக நடத்தி படுக்க வைத்ததும் சுமார் 10 நாட்கள் தன் கிளீனிக்கு செல்லாமல் 10 நாட்கள் வருமானத்தை இழந்து என்னை கவனித்துகொண்டதையும் பாராட்டாமல் இருக்க முடியாது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

அப்படிப்பட்ட பலவீனமான நேரங்களை கடந்து ஓரளவு சுகம் பெற்று இப்போது சேலத்தில் என் வீட்டில் ஓய்வும் விசேஷ பயிற்சிகளையும் படுக்கையிலேயே செய்து கொண்டிருக்கிறேன். நான் தனிமையில் வெளியே எங்கும் போகக்கூடாது என்றும், ஒரு ஆள் துனையுடன்தான் வெளியே போகலாம் என்றும் CMC வெல்லூரில் அறிவுருத்தினார்கள். ஆகவே 2024 டிசம்பரிலிருந்து வெளி **ஊர்களுக்கும்** வெளி **நாட்டுக்கும்** ஏற்பாடு செய்திருந்த கூட்டங்களை கேன்சல் செய்துவிட்டு ஜாமக்காரன் **பத்திரிகை ஊழியத்தை மட்டும்** செய்து வருகிறேன்.

ஆகவே என் வாசகர்கள் அனைவருக்கும் சபை **ஆயர்களுக்கும், பிஷப்மார்களுக்கும், மாடரேட்டர்களுக்கும்** CSI & மார்தோமா சபை யினருக்கும் 1969ம் வருடம் முதல் **நீங்கள் யாவரும் என்னை அழைத்து** கூட்டங்களை நடத்தி என்னை மிகவும் கவுரவித்து நடத்தியதை எண்ணி நன்றி கூறுகிறேன்.

வெளிநாடுகளில் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, மலேசியா, சிங்கப்பூர், பூரூனை நார்வே ஐயர்லாந்து, டென்மார்க், இந்தோனேசியா, சிவிட்சர்லாந்து, ஹாலாண்ட், ஜெர்மணி, இத்தாலி பெர்லின், இலங்கை எகிப்து அரேபியா நாடுகள் அனைத்திலும் பலமுறை பிரசங்கித் திருக்கிறேன்.. ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு நாடுகளுக்கும் சென்று விமானத்தில் இறங்கிய உடன் விமான நிலையத்தில் பிஷப், ஆயர்கள் சபை செயலர் கமிட்டியினர்சூழ வந்து பூகொத்து கொடுத்தும் சில இடங்களில் மாலை அனிவித்தும் என்னை வரவேற்றதை நினைத்து பூரிக்கிறேன். இவை ஒன்றுக்கும் தகுதி இல்லாத எனக்கு, கிடைத்த இந்த கவுரங்களையும் புகழ்ச்சியும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பாதப் படியில் சமர்பிக்கிறேன்.

இந்தியாவில் **காஷ்மீரிலிருந்து – கன்னியாகுமாரி** வரை CSI லூத்தரன் CMS. பெந்தேகோஸ்தே சபைகள் ECI சபைகள் மிஷனரி ஸ்தாபனங்கள் அனைத்தும் என்னிடம் காட்டின அன்பும் மரியாதையும் மிக அதிகம். இவைகளை என் படுக்கையில் படுத்துக்கொண்டே நினைத்து நன்றியால் ஸ்தோத்தரிக்கிறேன்.

இதற்கெல்லாம் காரணம் 1964 வருடம் மனம் திரும்பி பாவ மன்னிப்பு பெற்று பரிசுத்த ஆவியினால் நிறைத்து என்னை ஊழியத்ததுக்கு தகுதிப்படுத்திய **என் தெய்வம் இயேசு கிறிஸ்து தான் காரணமாகும்.** அவருக்கே துதியும் கனமும் மகிமையும் செலுத்தி இந்த அறிக்கையை முடிக்கிறேன்.

# கன்வென்ஷன் ஊழிய ஓட்டம் முடித்தேன்

எல்லாவற்றிக்கும் ஒரு முடிவு உண்டு என்று வேதம் கூறுகிறது.

1965யிலிருந்து 2024 டிசம்பர் வரை மொத்தம் 59 வருங்கள் ஊழியத்தினித்தம் நான் ஓடிய ஓட்டங்களை நினைவு கூறுகிறேன். வாரத்தில் இரண்டு நாள் மட்டும் வீட்டில் இருப்பேன், மற்ற வாரங்கள் **மலை ஊழியம், ஆதிவாசிகளிடடையே ஊழியம்** அதன்பின் **சபை கன்வென்ஷன்** மூலம் சபை மக்களை சந்தித்து அவர்களை **வசனத்தின்படி நடப்பது** எப்படி? என்றும் நம்மை சுற்றி உள்ள **கள்ள உபதேசத்திலிருந்து** தங்ளை காத்து கொள்வது எப்படி? என்றும் யார் **சரியான ஊழியர்** என்பதை பகுத்தரிவது எப்படி? என்பதைத் வாசனத்தின் அடிப்டையில் ஒத்து பார்த்து, **பெரோயர** பட்டினத்து சபையினரை போல் (அப். 17:10:11) வசனத்தில் வளருகிறவர்களாக இருக்கவேணடும் என்பதை உபதேசித்தேன்.

எந்த பிரசங்கம் நான் செய்தாலும் **மனம் திரும்புதலில்** கொண்டு வந்து நிருத்துவேன். என் ஊழியத்தில் எனக்கு **குற்ற உணர்ச்சி** இல்லாமல் என் பிரசங்க ஊழியத்தை முடிந்தேன். தாவீது கூறியதை போல் என் **அலைச்சலை** கர்த்தர் அறிவார். இப்போதும் விட்டில் இருந்து கொண்டே என்னால் இயன்ற ஊழியத்தை நிறைவேற்றுகிறேன். என் 59 வருட ஊழியத்தில் யாரும் என்னை **பண விஷயத்திலோ**. நான் சென்ற ஊர்களில் நான் தங்கிய **வீடுகளிலோ பெண் விஷயத்திலோ,** (இந்தியாவிலும் வெளி நாடுகளிலும்) யாரும் எந்த குற்ற சாட்டுகளும் என்மேல் கூறாதபடி என் **பிரசங்க** ஊழியத்தை நிறைவேற்றி முடித்தேன். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

என்ஊழியத்தில் என் எழுத்து மூலம் பாதிக்கப்பட்ட **பிஷப்மார் மாடரேட்டர்** உண்டு. குறிப்பாக **சுகமளிக்கும் ஊழியத்தை** நடத்துபவர்கள். **TV ஊழியர்கள்** பலர் உண்டு அவர்கள் யாவரும் இப்போதும் என்னை வெறுக்கிறார்கள். எதை குறித்தும் இது நாள் வரை கவலைபடவில்லை, நான் **ஜெபிக்கும்போது** என் ஜெபத்தில் **கர்த்தருக்குமுன்** நிற்கும்பேதுகுற்ற உணர்ச்சியில்லாமல் சந்தோஷத்தோடு என் ஜெபத்தை முடிக்கிறேன். என் ஆண்டவர் **என்னையும்** என் ஊள்ளத்தின் ஆழத்தையும் அறிவார். அதனால் நான் நல்ல தெளிவோடு தைரியமாக கர்த்தருக்கு முன் தொடர்ந்து நிற்க முடிகிறது . அது போதும் எனக்கு !

என் சாட்சியை நீங்கள் அறிந்திருப்பீர், ஆனால் ஊழிய ஆரம்ப காலத்தில் **இயேசுவை காண முயற்சித்த** விவரம் ஒருவேளை இதே மாதத்தில் எழுதுவேன். ஜெபியுங்கள் ஜெபிக்கிறேன்.

# குழப்ப உபதேசம்

குறிப்பு : ஜாமக்காரன் வாசகர்கள் அனைவருக்கும் ஜாமக்காரனில் **சரியான உபதேசங்களை** குறித்து வசனத்தோடு ஒப்பிட்டு எழுதினேன். அதன் காரணமாக பல தவறான உபதேசத்திலிருந்து வாசகர்கள் தெளிவுபெற்று வருவதை அறித்து தேவனை துதிக்கிறேன். அவைகளில் பிரதான உபதேசமான **அந்நிய பாஷைகளை** குறித்து விளக்கமாக எழுதியதை வாசித்து தெளிவு பெற்று தங்களை காத்துக்கொண்டார்கள். அது போல கீழே உள்ள தவறான உபதேசங்களில் அகப்பட்ட சிலர் எனக்கு எழுதியதால் இந்த உபதேசத்தை குறித்தும் தெளிவுபெற இதை வெளியிடுகிறேன். வேத வசனத்தை சரியாய் அறியாதவர்கள் நான் குறிப்பிடும் இந்த உபதேசத்தையும் வாசித்து குழம்பி போவார்கள். ஜாக்கிறதை! ஆவியானவர் தாமே உங்களுக்கு விளக்கி வழி நடத்துவராக. ஆமென்.

**வேதமே வெளிச்சம்** என்ற பத்திரிகையிலிருந்து எடுத்து எழுதுகிறேன்.

## உபதேசம்

பத்திரிகை ஆசிரியர் கூறுவதாவது

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, நம்முடைய பிதாவாகிய **யேகோவா** தேவனாலும் கர்த்தராயிருக்கிற **இயேசு** கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் சத்தியத்தோடு கூடிய அன்பும் பெருகுவதாக. ஆமென்.

உன் தேவனாகிய கர்த்தரைப் (யேகோவாவைப்) பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று வேதம் கூறுகிறது. (மூவர் சேர்ந்த ஒருவர்) என்று வேதம் கூறவில்லை. இதைக் கூறியவர் நமது கர்த்தராகிய **இயேசு கிறிஸ்து.** கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிறவன் எவனும் தேவனை உடையவன் அல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவன் எவனோ அவன் பிதாவையும் குமாரனையும் உடையவன்.

**ஜாமக்காரன்** எழுதுவது : மேலே எழுதப்பட்ட பத்திரிகை ஆசிரியரின் உபதேசம் தவறானது. அதைக் குறித்து என் விளக்கம் ஆகும். ஒரு நாள் இயேசுவின் சீஷர்கள் இயேசுவை நோக்கி பிதாவை எங்களுக்கு காட்டும். அது போதும் என்று கேட்டார்கள், அதற்கு பதிலாககத்தான் இயேசு கிறிஸ்து கூறினார். **பிதாவும்** (யெகொவாவும்) **நானும் ஒன்றாக இருக்கிறோம்** என்னை கண்டவன் பிதாவை கண்டான் என்று இயேசு கூறினார்.

வழுவாதபடி உங்களைக் காக்கவும் தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம் யேகோவாவாகிய

தேவனுக்கு சகல கனமும், துதியும் ஸ்தோத்திரமும், மகத்துவமும், மகா மேன்மையும், மகிமையும் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களுக்கும் **கிறிஸ்து இயேசுவின் மூலம்** உண்டாவதாக. ஆமென்.

நீங்கள் குற்றவாளிகள் என்று தீர்க்கப்டாதபடிக்கு மற்றவர்களை குற்றவாளிகள் என்று தீர்க்காதிருங்கள். ஏனெனில் நீங்கள் மற்றவர்களை தீர்க்கிற தீர்ப்பிப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள். நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும். நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல் அடுத்தவன் கண்ணிலிருக்கிற துரும்பை பார்க்கிறதென்ன? மாயக்காரனே முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு பின்பு உன் சகோதரனுடைய கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகை பார்ப்பாய்.

பரிசுத்தமானதை நாய்களுக்கு கொடாதேயுங்கள். உங்கள் முத்துக்களை பன்றிகள் முன் போடாதேயுங்கள். போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து திருப்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும். கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள். தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்கு திறக்கப்படும். ஏனென்றால் கேட்கிற எவனும் பெற்றுக்கொள்ளுகிறான். தடுகிறவனுக்கு திறக்கப்படும்.

உங்களில் எவனானாகிலும் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்கு கல்லைக்கொடுப்பானா? மீனைக்கேட்டால் பாம்பைக்கொடுப்பானா? பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறவனுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதீக நிச்சமல்லவா? ஆகையால் மனுசர் உங்களுக்கு எவைகளைச் செய்ய வேண்டுமென்றிருக்கிறீர்களோ அவைகளையே நீங்களும் அவர்களுக்கு செய்யுங்கள்?

இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள். கேட்டுக்குப்போகிற வாசல் விரிவும் வழி விசாலமுமாய் இருக்கிறது. அதில் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல், வழி இடுக்கமும் நெருக்கமுமாய் இருக்கிறது. அதை கண்டுபிடிக்கிறவர்கள் சிலர். கள்ளத்தீர்க்கத்திரிசிகளுக்கு எச்சரிகையாய் இருங்கள். அவர்கள் ஆட்டுத் தோலைப் போர்த்துக்கொணடு உங்களிடத்தில் வருவார்கள். உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். அவர்களுடைய கணிகளினாலே அவர்களை அறிவீர்கள். முட்செடிகளில் திராட்சைப் பழங்களையும். முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்கள். அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக்கொடுக்கும் கெட்ட மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது. நல்ல கனிகொடாத மரமெல்லமாப் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். ஆதலால் அவர்களுடைய கனிகளாலே அவர்களை அறிவீர்கள். இந்த பகுதியை ஆசிரியர் யாரை குறிப்பிட்டு எழுதினார்? எதற்காக எழுதினார் என்பது புரியவில்லை.

ஜாமக்காரன் வாசகர்களுக்கு பெரும் குழப்பம் உண்டாக்கும் என்று அறிவேன்.

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தப்படி செய்கிறவனே பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பானே அல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் ஒருக்காலும் பிரவேசிப்பதில்லை.

☐ உங்கள் விண்ணப்பங்களையும் வேண்டுதலினாலும் ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் **தேவனுக்குத்** (யேகோவா தேவனுக்கு) தெரியப்படுத்துங்கள். அந்நாளில் அநேகர் வந்து என்னை நோக்கி (இயேசுவை நோக்கி) கர்த்தாவே! கர்த்தாவே! உம்முடைய நாமத்தினாலே திர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோமல்லவா? என்பார்கள். அப்பொழுது நான் உங்களை ஒருக்காலும் அறியவில்லை. அக்கிரம செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன். ☐

ஆகையால் நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு இவைகளின்படி செய்கிறவன் எவனோ அவனை கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டுகிற புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து பெருவெள்ளம் வந்து காற்று அடித்து அந்த வீட்டின்மமேல் மோதியும் அது விழவில்லை. ஏனென்றால் அது கன்மலைமேல் அஸ்பாரமிடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ அவனை தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியீன மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான் பெருமழை சொரிந்து பெருவெள்ளம் வந்து காற்று அடித்து அந்த வீட்டின்மேல் மோதினபோது அந்த வீடு விழுந்தது விழுந்து அழிந்தது. முழுவதும் அழிந்தது என்றார். இயேசு இவைகளை சொல்லி முடித்தபோது வேதபாரகரைப்போல் போதியாமல் அதிகாரமுடையவராய் போதித்தபடியால் அவர்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்.

அன்பான கிறிஸ்தவ மக்களே ! இவைகளே நியாயப்பிரமாணமும் தீர்க்கத்தரிசனங்களுமாம் என்று ஆண்டவர் கூறியுள்ளார். மத். 5,6,7 அதிகாரங்களில் வெளிப்படுத்தியுள்ளார், இந்த நியாயப்பிரமாணம், தீர்க்கத் தரிசனங்களின்படி வாழ்ந்து வருவோமாக . இதுதான் கிறிஸ்தவ மக்களாகிய நமக்கு கொடுக்கப்பட்ட தேவனுடைய சட்டதிட்டங்களாகும். இந்த உபதேசங்களின்படி நாம் வாழ்ந்து வருவோமாக. நம்மால் வாழ்வது முடியாத காரியந்தான். ஏனெனில் நாம் பெலவீனர். நம்மை முற்றிலுமாய் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து ஜெபிப்போமாக. **இந்நியாயப்பிரமாணம் தீர்க்கத்தரிசனகளின்படி** நடக்க தேவன் நமக்குக் கிருபைபுரிவார் ஆமென்.

**ஜாமக்காரன் :** மேலே பத்திரிகையின் ஆசிரியர் குறிப்பிட்டது போல் இவைகள் நியாய பிரமானமல்ல, தீர்க்கதரிசனமுமல்ல என்பதை வாசகர்கள் அறியவேண்டும்.

நமக்குமுன் வைக்கப்பட்ட நம்பிக்கைப் பெற்றுக் கொள்ளுபடிக்கு அதை பெற்றுக்கொள்ள ஓடிவந்த நமக்கு (எபி. 12:1,2,3) இரண்டு மாறாத விசேசங்களினால் ஆறுதல் உண்டாகும்படி தேவன் நம்மை அழைத்திருக்கிறார்.

☐ நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கை எது ? பரம அழைப்பு இந்த பரலோக அழைப்பாகிய சிலாக்கியத்தைக் பெற்றுக்கொள்ளும்படிக்கு இரண்டு மாறாத விசேசங்களினாலே தேவன் நம்மை அழைத்திருக்கிறார் அவை எவை? ஒன்று மெய்யான **ஞானஸ்நானம்** இரண்டு மெய்யான **இராப்போஜன நினைவு கூறுதல்** என்பவைகள் ஆகும். கிறிஸ்தவர்களே நீங்கள் மெய்யன ஞானஸ்நானம் பெற்றிருக்கிறீர்களா? மெய்யான ஞானஸ்நானம் என்பது நீங்கள் மனந்திரும்பி **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே** தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும். உங்களில் பெரும்பாலோர் குழந்தை ஞானஸ்நானம் பெற்றவர்களாக இருக்கிறீர்கள் அல்லது ஏதோ ஒருவகையில் தெளிப்பு ஞானஸ்நானம் பெற்றவராகக் கூட இருக்கலாம் மெலும் நீங்கள் **பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம்** பெற்றவர்களாகக்கூட இருக்கலாம். நீங் கள் பெற்றிருக்கிற ஞானஸ்நானம் **செல்லுபடியாகாது.** நீங்கள் மனம் திரும்பி **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே** தண்ணீரில் மூழ்கித்தான் ஞானஸ்நானம் பெறவேண்டும். அதுவே மெய்யான ஞானஸ்நானம் அகும். குழந்தை ஞானஸ்நானமும். பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் பெறுகிற ஞானஸ்நானமும் உண்மையான ஞானஸ்நானம் அல்ல. **குழந்தைகள் ஏதும் அறியாதவர்கள். அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதும் தவறு.** மேலும் பிதா குமாரன் பரிசுத்த ஆவியினால் பெறும் ஞானஸ்நானமும் உண்மையான ஞானஸ்நானம் அல்ல. அதனால் பரிசுத்த ஆவியைப்பெறமுடியாது. இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே மட்டுமே நாம் ஞானஸ்நானம் பெறவேண்டும். அதுபோல இயேசுகிறிஸ்துவின் மரணத்தையும் **அவர் மரண நாளில்தான்** நாம் நினைவுகூற வேண்டும். என்னை நினைவுகூறும்படி இதைச் செய்யுங்கள் என்று இயேசு கூறினார்

☐ **ஜாமக்காரன் :** இவர்கள் உபதேசம் கூறுவதாவது. நீங்கள் **பிதா, குமாரன், பரிசுத்தாவியினால்** ஞானஸ்நானம் பெற்றிருந்தால் பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க முடியாது. அது அங்கு செல்லுபடியாகாது என்கிறார். ஆனால் இயேசு கிறிஸ்து சொலடவதை கவணணியுங்கள். **நீங்கள் புறப்பட்டுபோய்** சகல ஜாதிகளையும் சீஷராக்கி, **பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால்** அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள் மத். 28:19. இந்த குறிப்பிட்ட வசனத்தை இவர்களுக்கு சுட்டிக்காட்டினால் இது **கத்தோலிக்கர்களால்** கள்ளத்தனமாக மொழிபெயர்க்கப்பட்டது என்கிறார்கள். ஆனால் சரித்திரம் அறிந்தவர்களுக்கு இந்த வசனம் **மூலபாஷையிலும்** ஆங்கில **மொழி பெயர்ப்பிலும்** இப்படியேதான் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

☐ இன்றுள்ள திருச்சபையார் (கிறிஸ்தவர்கள் என்போர்) இராப்போஜனத்தையும் தங்கள் மனம்போல் ஆசரிக்கிறார்கள். ஆண்டவருடைய மரண நாள் எது என்று வேதம் வெகுதெளிவாகக் கூறியுள்ளது. அந்த நாள் ஆயத்த நாளாயிருந்தது. எதற்கு ஆயத்த நாளாயிருந்தது? பஸ்காப் பண்டிகைக்கு ஆயத்த நாளாயிருந்தது என்று வேதம் வெகு துல்லியமாகக் கூறியுள்ளது. **பஸ்காப் பண்டிகை எப்பொழுது?** ஆபிப் 14ம் தேதி என்று யாத் 12ம் அதிகாரம் கூறுகிறது. அப்படியானால் ஆண்டவரின் மரண நாள் எதற்கு ஆயத்த நாளாயிருந்தது? ஆபிப் 14ம் தேதியாகிய பஸ்காப் பண்டிக்கு ஆயத்த நாளான 13ம் தேதியாகும். இந்த நாளில்தான் ஆண்டவரின் மரண நாளை நாம் நினைவுகூற வேண்டும். பெரிய **வெள்ளிக்கிழமைகளில் அல்ல.** கிழமைகள் வேதத்தில் கிடையாது. அது பாபிலோன்ய உபதேவம்.

ஆண்டவருடைய மரணநாள் ஆபிப் 14ம் தேதியிலும் அல்ல. ஆபிப் 13ம் தேதியே ஆபிப் 14ம் தேதி யூதர்கள் ஆசரித்த ஆடு புசித்தலாகிய பஸ்கா . ஆபிப் 14ம் தேதியில் இயேசு மரிக்கவில்லை 14ம் தேதிக்கு முந்தின நாளில் 13ம் தேதியில் மரித்தார். சிலர் பஸ்கா என்பது ஆடு அடிக்கப்பட்ட நாளா? புசித்த நாளா? என்று வினவுகின்றனர். யூதர்க்கு பஸ்கா என்பது 13ம் தேதியாகிய புசிப்புநாள் அல்ல. அது ஆயத்த நாள் 14ம் தேதியே புசிப்பு நாள். ஆனால் கிறிஸ்தவ மக்களாகிய நமக்கோ ஆபிப் 13ம் தேதியே பஸ்கா புசிப்புநாள். ஏனெனில் 13ம் தேதியில்தான். இயேசு மரித்தார். **ஆகவே அவரது மரண நாளில் அவரது மரணத்தை நாம் நினைவு கூறவேண்டும்.** அதை சாயங்காலத்திலே அடித்து இரவிலே புசிக்க வேண்டும். 14ம் தேதி எப்பொழுது ஆரம்பிக்கும்? 13ம் தேதி முடிவில் ஆரம்பிக்கும். எனவே 14ம் தேதியே யூதர்கள் பஸ்காவை ஆசரித்து வருகிறார்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே! சத்தியம் இவ்வண்ணமிருப்பதால் சத்தியத்திறுகு மாறாக ஓர் வெள்ளிக்கிழமையில் அதைக் கொண்டாடுவதோ ஆபிப் 14ம் தேதியில் ஆசரிப்பதோ கூடாது. சத்தியம் இவ்வண்ணமிருப்பதால், கிறிஸ்தவர்கள் சத்தியத்துக்கு விரோதமாக ஓர் வெள்ளிக்கிழமையில் கொண்டாடுவது ஏன்?

வேதத்தில் இல்லாத **லெந்துகாலம்** 40 நாள் உபவாசம் பெரிய வாரம். பெரிய வியாழன் பெரிய வெள்ளி. ஈஸ்டர் பண்டிகை என்று வேதத்தில் இல்லாத மனித கற்பனைகளை உபதேசங்களாக போதித்துவரும் குருக்களே, பாஸ்டர்களே அத்தியட்சர்களே உங்களுக்கு ஐயோ! என்று வேதம் கூறிகிறது. அந்த காலத்தில் உங்களைப்போன்ற யூத குருமார் வேத பாரகர் பரிசேயர் ஆண்டவர் போதனைகளுக்கு சத்தியங்களுக்கு எதிர்த்து நின்றது போல இக்கால வேதபாரகர் பரிசேய ரான நீங்களும் வேத உபதேசங்களுக்கு சத்தியங்களுக்கு எதிர்த்து நிற்கிறீர்கள். எச்சரிக்கை யாயிருங்கள். அந்த நாள் எந்த நாள் ஆண்டவர் மரித்த நாள் எதற்கு ஆயத்த நாள் பஸ்காப் பண்டிகைக்கு ஆயத்தநாள், ஆபிப் 14ம் தேதிக்கு ஆயத்தநாள். பெரிய வெள்ளிக்கிழமைக்கு ஆயத்தநாள் அல்ல. ஓய்வுநாளும் ஆரம்பமாயிற்று என்று

வேதத்தில் தெளிவாய் எழுதப்பட்டுள்ளது. எந்த ஓய்வு நாள் ? சனிக்கிழமை **ஓய்வு நாளா?** அல்ல பஸ்காப் பண்டிகையின் **முதல்நாள்** ஓய்வுநாள் ஆரம்பாமயிற்று. இதை **பெரிய ஓய்வு** நாள் என்று பைபிள் குறிப்பிடுகின்றது. சிந்தியுங்கள் சிவர் 14ம் தேதியில் ஆண்டவரின் மரண நாள் என்று ஆசரிக்க வேண்டும் என்று கூறிகிறார்கள். அதுவும் தவறு.

ஆண்டவர் தம் சீசரோடு இராப்போஜணத்தை ஏற்படுத்தின நாளும் கெத்சமெனேயில் வியாகுலப்பட்ட நாளும் ஆண்டவர் பல பாடுகள்பட்டு துன்பப்பட்ட நாளும் காட்டிக்கொடுக்கப்பட்ட நாளும் ஆண்டவர் மரித்த நாளும் ஆபிப் 13ம் தேதியே! அதற்கு அடுத்தநாள் பஸ்கா நாள். பஸ்கா நாளில் மரித்த உடல்கள் சிலுவையில் இராதபடிக்கு அவைகளை எடுத்துப்போடும்படிக்கு யூதர்கள் பிலாத்துவை வேண்டிக்கொண்டார்கள் என்று வேதம் சொல்கிறது எனவே பஸ்கா பண்டிகைக்கு முந்தின நாளில் நமது ஆண்டவர் சிலுவையில் அறையப்பட்டு மரித்தார். எனவே ஆபிப் 13ம் தேதயில் ஆண்டவர் மரண நாளை நாம் நினைவு கூற வேண்டும்.

**ஜாமக்காரன் :** மேலே குறிப்பிட்டுள்ளது இவர்களின் தவறான உபதேசமாகும். இவைகள் நியாய பிரமான கால உபதேசமாகும். இயேசு மரித்து உயிர்தெழுந்து பரமேறியபின் புதிய ஏற்பாட்டு சபை தோன்றியது. **ஆதி திருச்சபை** எல்லா நாட்கலும் **அப்பம் புசித்தும் திராட்ச ரசம்** பருகியும் **ஆராதனை ஆசரித்து** வந்தார்கள். இது **வீடுகள் தோறும்** மக்கள் கூடி வந்தபோது நிறைவேற்றினர். விசுவாச மக்கள் பெருகியபின் ஒரு பொதுவான இடத்தில் மக்கள் ஆராதிக்க கூடினர். அது இயேசு **உயிர்த்தெழுந்த** நாளாகிய **வாரத்தின் முதல் நாளான ஞாயிற்று** கிழமையாயிருந்தது. கர்த்தருடைய பிள்ளைகள் எந்த நாளிலும் **ஆராதிக்கலாம்,** எந்த நாளிலும் **திருவிருந்து** கைக்கொள்ளலாம், இயேசு கிறிஸ்துவின் பிறப்பு ஒவ்வொரு **நாளிலும் நினைவு கூறலாம்.** ஒவ்வொரு நாளிலும் **அவர் மரணத்தையும், உயிர்தெழுதலையும்** நினைவு கூறலாம். ஆகவே மேலே உள்ள பத்திரிகை ஆசிரியரின் உபதேசத்தை யாரும் பின்பற்றக்கூடாது குறிப்பாக ஜாமக்காரன் வாசகர்கள் ஜாக்கிறதையாயிருக்க வேண்டும், வேத வசனத்தின்படி கூறப்பட்ட நான் எழுதிய உபதேசத்தை பின்பற்றாத அந்த பத்திரிகையின் ஆசிரியருக்கு ஐயோ!


## ONLINE BANKING (NEFT)

**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**
SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**
SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

# உங்கள் கேள்விகள் சந்தேகங்கள்...
# எங்கள் பதில்கள்

**கேள்வி** :- அற்புதங்கள் **அடையாளங்கள்** இக்காலத்திலும் நடைபெறுகின்றதா?

**பதில் :** இது ஆண்டவரின் **வருகையின் காலம்.** தற்காலத்தில் அற்புத அடையாளங்கள். நிகழாது, **அற்புத அடையாளங்களானாலும ஓய்ந்துபோம்**. என்று வேதம் கூறுகிறது என்பது வேத வெளிச்சம் ஆசிரியரின் தவறான உபதேசம் ஆகும். எனவே சகோதரன் மோகன் **சி, லாசரஸ்,** சகோ. **பால் தினகரன்** போன்ற சிலர் இயேசுவை நோக்கி சுகமளிக்கும் ஆராதனைகள் நடத்தி வருகின்றனர். நோய்கள் நீங்கி சுகம் பெறுவதாக கூறி மக்களை ஏமாற்றுகின்றனர். மோசம் போகாதிருங்கள். மரித்துப்போன சகோதரன் தினகரன் சகோ. அப்பாதுரை இவர்களின் கேசட்டுகளை ஒளிபரப்பி மக்களை ஏமாற்றுகின்றனர். மற்றபடி **இக்காலத்தில் அற்புதங்கள் அடையாளங்கள் நிகழ்வதில்லை.** கர்த்தாவே ! கர்த்தாவே! உம்முடைய நாமத்தினாலே அற்புதங்கள் செய்தோம். அல்லவா? உம்முடைய நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? என்று சொல்கிற இக்காலத்தில் அக்கிரமச் செய்கைக்காரரே என்னைவிட்டு அகன்று போங்கள் என்று ஆண்டவர் கூறிகிற இக்காலத்தில் எப்படி அற்புதங்கள் நடைபெறும்? எனவே கிறிஸ்வ மக்களே விழிப்படையுங்கள்! இவைகள் **போலியான அற்புதங்கள் அடையாளங்கள்.**

**ஜாமக்காரன் : வேதமே வெளிச்சம் என்ற பத்திரிகை ஆசிரியர் அவர்கள் எழுதிய இதுவரை வாசித்த யாவும் வேத புரட்டாகும். இவர்கள் வேத புறட்டர்கள் ஆகும்.**

. **கேள்வி** கிறிஸ்தவர்களின் **தவக்காலம்** என்ற ஒரு காலத்தை அக்கால அப்போஸ்தலர் காலத்தில் அனுசரித்தார்களா? அதுபற்றிய உங்கள் கருத்து என்ன ?

**பதில்** : **தவக்காலம்** என்ற ஒரு காலம் ஆதிகால அப்போஸ்தலர்கள் காலத்தில் பின்பற்றப்பட்டதாக வரலாறு இல்லை. இது நான்காம் நூற்றாண்டுக்குப் பின்னரே கடைபிடிக்கபட்டு வருகிறது. தேவையில்லாதவை களை நுழைப்பதில் **ரோமன் கத்தோலிக்க** சபை அதீக ஆர்வம் காட்டி வருகிறது. **பாபிலோனில் இஸ்டார்** என்ற **தேவதைக்கு மார்ச்சு** மாதத்தில் **ஆறுவார நோன்பும்** அதைத்தொடர்ந்து ஒரு

பண்டிகையும் உண்டாயிருந்தது. இதை தங்களுக்கு சாதகமாக்கி **40 நாள் தவக்காலம்** என்றும் இயேசு 40நாள் வனாந்திரத்தில் உபவாசம் இருந்ததை சுட்டிக்காட்டி நாமும் 40 நாள் உபவாசம் இருக்க வேண்டும் என்றும் ரோம சபை **ஏற்படுத்தியதே** இந்த தவக்காலம் வேதத்தில் இப்படி உபவாசம் இருக்க வேண்டும் என்ற கட்டளை இடப்படவில்லை. **எனவே நாம் உபவாசம் இருக்க தேவையில்லை.** மேலும் இந்த 40 நாள் உபதேசம் மாய்மாலமான உபதேசம் ஆகும். பெயர் சபை ஊழியர்கள் இந்த 40 நாள் உபவாசத்தை பிரமாதப்படுத்துகின்றனர். **இந்த 40 நாளில் தான் உபவாசம் இருக்க வேண்டும் என்பதில்லை.** நம்மை விட்டு **நீங்காத பாவம்** பலவீனங்களுக்காகவும் சா**த்தானின் தொந்தரவுகளுக்காகவும்** நாம் உபவாசித்து ஜெபம் செய்ய வேண்டும்.

**நான்காம் நூற்றாண்டில் வேதத்தை மொழிபெயர்த்த வாட்டிகன் மொழிபெயர்ப்பாளர்கள்** கர்த்தராகிய **இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுங்கள் என்றிருப்பதை,** மாற்றி **பிதா குமாரன் பரிசுத்த ஆவியின்** நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுங்கள் என்று மொழிபெயர்த்து விட்டனர். ஆனால் அப்போஸ்தலர்கள் எல்லாரும் இயேசுகிறிஸ்வின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்திருகிறார்கள். அதற்கு வேதமே சாட்சி!

அப்படியிருக்க **பிதா குமாரன் பரிசுத்த ஆவியின்** நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுங்கள் என்று அதை மாற்றி மொழிபெயர்த்துவிட்டதால் ஏற்பட்ட குழப்பமே திரித்துவம் நுழையக் காரணமாய் அமைந்து விட்டது திரித்துவம் ஒரு **பாபிலோன்ய கொள்ளை** மாத்திரமல்ல கிறிஸ்மஸ் ஈஸ்டர் என்ற **பண்டிகைகளும் அஞ்ஞானப் பாபிலோன்ய** பண்டிகையே!! ஆனால் இதெல்லாம் கிறிஸ்தவப் பண்டிகைகள் என்று நம்ப வைத்துள்ளது.

## மேலே வாசித்த அனைத்தும் தவறான உபதேசமாகும்

***ஜாமக்காரனின் விளக்கம் :***

☐ முதலாவது நீங்கள் தெரிந்துக்கொள்ளவேண்டிய விஷயம், இயேசு கிறிஸ்துவின் உபதேசம். மத். 28:19 **பிதா, குமாரன் பிரிசுத்தாவி** நாமத்தில் ஞானஸ்நானம் கொடுங்கள் என்று கூறி நான் சொன்ன யாவற்றையும் ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் என்றார்.

☐ II யோ. 9ம் வசனம் இப்படி சொல்கிறது, ஒருவன் கிறிஸ்துவின் மத். 28:19ல் கூறப்பட்ட **ஞானஸ்நான உபதேசத்தில் நிலைத்திராமல்** மீறி நடக்கிற எவனும் தேவனை (யெகோவாவை) உடையவன் அல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருப்பவனே

பிதா (யெகோகாவை)யும் **குமாரனையும்** உடையவன்.

மேலும் ஒருவன் உங்களிடத்தில் வந்து **(வேதமே வெளிச்சம்)** பத்திரிக்கை மூலமாகவோ, பிரசங்கம் (மூலமாகவோ) இந்த உபதேசத்தை **(பிதா, குமாரன், பரிசுத்தாவி)** உபதேசத்தை கொண்டு வராமல் இருந்தால் அவனை **உங்கள் வீட்டிலே சேர்த்துக்கொள்ளாமலும்,** அவனுக்கு **வாழ்த்து சொல்லாமலும்** இருங்கள். மேலும் இப்படிப்பட்ட தவறான உபதேசத்தை கூறுகிறவனை **வீட்டில்** சேர்த்தவனுக்கும் இவனுக்கு **வாழ்த்துதல்** சொன்னவனுக்கும் அந்த **தவறான உபதேசம் செய்தவனின்** எல்லா **துர்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்.** எத்தனை பயங்கரம் !

- ☐ இப்போது **அற்புதம்,** அற்புத **சுகம்** எதுவும் நடப்பதில்லை என்றும் **அற்புதங்கள்** எதுவும் நடக்காது என்று இவர் கூறுகிறார். இயேசு சீஷர்களை ஆசீர்வதித்து அனுப்பும்போது **பிசாசுகளை துரத்துவதும், வியாதிகளை சுகமாக்கவும்** நான் உங்களுக்கு சகல அதிகாரமும் கொடுக்கிறேன். மாற் 16:20 அவர்கள் புறப்பட்டு போய் எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே **கிரியை நடப்பித்து,** அவர்களால் நடந்த அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் **வசனத்தை உறுதிப்படுத்தினார்.** ஆமென்.

**புற ஜாதியாருக்கு** வசனம் தெரியாது. இயேசுவையும் தெரியாது. அப்படிப்பட்ட வர்களுக்கு சுவிசேஷம் சொன்னால் மட்டும் போதாது **இயேசு குணமாக்குபவர்,** அற்புதம் **செய்கிறவர்** என்பதை அவர் நேரில் அதை பார்க்கும்போதும் தாங்கள் தங்கள் **சரீரத்தில்** அந்த சுகத்தை அனுபவிக்கும்போது இவர்கள் குறும் வசனம் உண்மை. வசனத்தில் இவர்கள் கூறிய இயேசு **உண்மையில் தெய்வம்தான்** என்று நம்புவார்கள்.

இந்த அற்புதம் **மற்ற மதத்தினருக்குதான** பொருந்தும், ஆனால் கிறிஸ்தவர்களுக்கு இந்த அறுபுதம் நடக்காது. காரணம், கிறிஸ்தவர்களுக்கு **வசனம் தெரியும்.** அந்த வசனத்தை **விசுவாசியாமல்** வசனத்துக்கு **கீழ்ப்படியாமல்** போனால் அற்புதங்கள் நடக்காது. அவர்கள் மத்தியில் மேலும் பிசாசசை கர்த்தர் அனுப்புவார். II தெச 2:9-10, அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல **வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும் விளங்கும்**. (காரணம்) அவர்கள் சத்தியத்தை விசுவாசிக்காமல் (போனபடியினால்) அவர்கள் அநீதியில் பிரியப்படுகிறதினால் அவர்களை ஆக்கினைக்குள்ளாக்கும்படி அவர்கள் **பொய்யை விசுவாசிக்க** தக்கதாக (பிசாசசை அனுப்புவார்).என்று எழுதியிருக்கிறது.

அதனால்தான் தினகரன் குடும்பம், நாலுமாவடி, ஆலன்பால் இப்படி பலர் ஜெபத்தில் பொய்யாக பெயர்களை, வியாதியின் **பெயரை** கூட்டத்தில் கூறுவார்கள். இது உண்மையல்ல, ஆனால் இவைகளை நம்புகிற ஏராளமான கிறிஸ்தவர்கள் உண்டு. இந்த கிறிஸ்தவர்கள் **உன் விசுவாசமே உன்னை இரட்சிக்கும்** என்றும் அவர் **தமது வசனத்தை அனுப்பி அவர்களை குணமாக்குகிறார்** என்ற வசனங்களை குறித்து எல்லா கிறிஸ்தவர்களும் அறிவார்கள். வசனம் அறிந்தும் **வசனத்துக்கு கிழ்படியாமல்** போனால் கர்த்தரே **பிசாசை** பல ஊழியக்காரரின் பெயரில் அறுபுதங்களை செய்ய வைத்து நம்ப பண்ணுவார். **அறிந்திருந்தும் தவறு செய்கிறவன் அனேக அடிகள் அடிக்கப்டுவான்** என்று வேதம் கூறுகிறது.

ஆனால் **வேதமே வெளிச்சம்** பத்திரிகை ஆசிரியர் எழுதியது போல் இப்போது **அற்புத சுகம், அற்புதங்கள்** எதுவும் நடப்பதில்லை என்பது **புறட்டு உபதேசமாகும்**. வட இந்திய காடுகளில் ஆதிவாசிகள் இடையே ஊழியம் செய்யும் **மிஷனரிகளின்** ஊழியத்தில் **செத்தவர்கள்** மிஷனரிகளின் ஜெபத்தால் உயிரோடு **எழுந்தது,** வியாதியஸ்தர் பலர் ஆஸ்பத்திரிக்கு செல்லமுடியாமல் இருக்கும் வியாதியஸ்தருக்கு மிஷனரிகளும் ஆதிவாசிகளும் இணைந்து ஜெபிப்பார்கள். **பல வியாதிகள் சுகமான சாட்சிகள் உண்டு. வேதமே வெளிச்சம்** ஆசிரியருக்கு **இவைகள் தெரிய நியாயம்** இல்லை.

## ஜீவனுள்ள சாட்சி

என் கூட்டங்கள் சுகமளிக்கும் அல்லது அற்புதங்களின் கூட்டமல்ல. Bible Teaching Ministry வேத வசனம் கற்பித்தல் ஊழியமாகும். ஆனால் மேலே வாசித்தது போல என் ஊழியத்தில் எத்தனையோ பேர்களுக்கு சுகம் கிடைத்துள்ளது. இப்படிப்பட்ட சாட்சிகளை என் பத்திரிகையிலோ, கூட்டத்திலோ யாரையும் சாட்சி சொல்ல வைப்பதில்லை. வருபவர்கள் எல்லாரும் என்னைதான் புகழுகிறார்களே தவிற சுகமளித்த கர்த்தரை மகிமை படுத்துவதில்லை. அப்படி செய்தால் அது எனக்கு ஆபத்து ஆகும்., வசனம் அவர்களை சுகமாக்கிற்று.

இப்போது சுகம் அறிவிக்கப்படுவதில்லை என்று அந்த பத்திரிகை ஆசிரியர் கூறுகிறார். அல்லவா, அவருக்காக Email வழியாக கொச்சியிலிருந்து வந்த இந்த சாட்சியை வெளியிட்டேன். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்.



# குடியரசு தின வாழ்த்துதல்

இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்க முயற்சித்த தியாகிகளுக்கும் இந்தியாவின் அனைத்து மாநிலத்தில் உள்ள ஆயிரக் கணக்கானவர் ஜாதி, மத, இன மொழி இன வேறுபாடின்றி அரும்பாடுகள்பட்டு பல கொடுமைகளை சகித்து நமக்கு சுதந்திரம் வாங்கித் தந்தனர். இந்தியாவிற்கு சுதந்திரம் பெற போராடிய வர்களின் சரித்திரங்களை படிப்பது நல்லது. அவர்களுக்காக அவர்கள் குடும்பத்துக்காக நாம் யாவரும் நன்றியுள்ளவர்களாக அந்த தியாக குடும்பங்களை நினைவு கூறி நம் கர்த்தரை துதிப்போம்.

ஜெய்ஹிந்த்

JANUARY 2025

Printed Book (Periodical)

RNI Reg. No. TNBIL/2016/70171

**Annual Subscription:**
India - Rs.60/
Foreign - Rs.600/

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.